சிவமயம்

gistered as a News paper in Ceylon

P. M. G. NO. H. A 69/300 of 1939.

# இந்துசாதனம்

ஸரோத்த வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்— விய ஷூ சித்திரைமீ க௨௨ (1946 ஏப்பிறில் 23 செவ்வாய்க்கிழமை) [இல ரு

# தலைமையுரை

[சென்றவாரம் நிகழ்ந்த அகில இலங்கைச் சைவமகாநாட்டில் தலைமை வகித்த பேராசிரியர் சு சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் செய்த பிரசங்கத்தின் சுருக்கம்.]

சிவபெருமான் முற்றறிவினரென்றும் அநாதி போதரென்றும் அறிவுக்கெல்லாம் மூலமாயுள்ளவரென்றும் நாங்கள் படித்தோம். ஆயினும் அவர் முற்றறிவினரல்லரென்றும் அவர் அறியாததொன்றுண்டென்றும், மணிவாசகப் பெருமான் பாடியருளினர். அன்றியும் சிவபெருமானின் வேறல்லராகிய சுப்பிரமணியப் பெருமான் முற்றறிவினரல்லரென்றும் அவர் அறியாததொன்றுண்டென்றுங் கச்சியப்ப சிவாசாரியர் பாடியருளினர். சிவபெருமான் அறியாதது யாதெனில்,

“தன்பெருமை தானறியாத் தன்மையன்
காண் சாழலோ”

என்றூர் மணிவாசகப் பெருமான்.

கச்சியப்பரும் சுப்பிரமணியப் பெருமான்,

“முற்றுந் தானுங் காண்கிலன்
இன்னரு முந்தன்பெருந் தலைமை”

என்றூர் கச்சியப்ப சுவாமிகள்.

சிவபெருமானுடைய பெருமையை அவரே அறியாராயின் நாங்கள் முத்தியடைந்த காலத்தும் அறிய மாட்டோம். அவரது பெருமை அத்தன்மையது. ஆதலால் அவரையடையச் செய்விப்பதாகிய சைவசமயத்தின்பெருமையும் எங்களால் அறியத்தக்கதன்று.

இத்தன்மையான சைவசமயத்தை எங்களுக்குத் தமிழிலே தந்தவர்கள் சமய குரவர்களும் சந்தான குரவர்களுமாய், அவருமிதைத் தந்ததற்கு நாங்கள் செய்யத்தக்க பிரதி யாது? வைதிகர்கள் தயக்கு நூல்களை யருளியவர்களாகிய இருடிகளுக்கு ஆரிடையாகச் செய்கின்றூர்கள். ஆரியாகம் எத்தன்மையதெனில் இருடிகள் தந்த அறிவை வளர்த்தலும் பரப்புதலும் காத்தலுமாம். நாம் எமது குரவர்களுக்குச் செய்யத்தக்க பிரதி மூன்றனுள் மிகக் குறைந்ததாகிய காத்தலையாயினும் செய்தல் வேண்டும்.

நாம் சைவசமயத்தைக் காக்க வேண்டிய துறைகள் பல. அவற்றுள் ஒன்று அதன்முதனூலாகிய வேதாகமங்களாம். சைவரென்ற பெயரைத் தாங்கிக்கொண்டு வேதாகமங்களை விலக்குகிறவர்கள் ஒரு சாராருளர். அவர்கள் பார்ப்பாரல்லாத வருணத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் பார்ப்பாரைப் பகைத்து, அவர்களுடைய மொழி சமஸ்கிருதமென்று வழங்கி அதைப் பகைத்து, வேத சிவாகமங்கள் அதிலிருத்தலால் அவற்றை இகழலாயினர்; அவர்கள் தமக்குத் தேவார திருவாசகங்களையும் சித்தியார் முதலிய நூல்களையுமே சைவத்தின் முதனூல்களாகக் கொள்கின்றனர்.

திருவாசகமானது சிவபெருமானை வேதமெய்நூல் சொன்னவனேயென்றும், மன்னுமாமலைமகேந்திரமதனிற் சொன்ன ஆகமந் தோற்றுவித்தருளும் என்று வேதம் சிவாகமமாகிய இரண்டும் இறைவநூல் எனலால் திருவாசகத்தை முதனூலாகக்கொள்ளுமிவர்கள் வேத சிவாகமங்களை மறுத்தல் பொருந்தாது. அன்றியும் பிராமணரது மொழி சமஸ்கிருதமன்று. அது எவர்களாலாயினும் பேசப்பட்டதன்று. அது பரதகண்டம் முழுவதற்கும் சாஸ்திர பாஷையாகவுள்ளது. ஆதலால் பார்ப்பாரை வெறுப்பவர் சமஸ்கிருதத்தை வெறுத்தல் பொருந்தாது. ஒருவர் எந்த வகுப்பைச் சேர்ந்தவரென்பது அவர் பேசும் மொழியினாலேயே நிச்சயப்படும்; பிராமணர் பெரும்பாலும் தமிழையே பேசுகின்றனர். அவருடைய பாஷையை வெறுக்கில் இவர்கள் தமிழையல்லவா வெறுக்கவேண்டும்.

சிலர் தாங்கள் வேதங்களை வெறுத்தற்குக் காரணம் அது காற்று நெருப்பு நீர் முதலிய இயற்கைப் பொருள்களை வழிபடுதலும் யாகங்களிலே உயிர்க்கொலை வகுத்தலும், அவைகள் சிற்சில முனிவர்களாற் செய்யப்பட்டன வென்று வேதமே கூறுகின்றதுமேயென்பர். வேதத்திலேசொல்லப்படும் முனிவர்கள்மந்திர திருஷ்டாக்களாவார்களன்றி அவற்றைச் செய்தவர்களல்லர். மந்திர திருஷ்டாவென்பதன் பொருள் மந்திரத்தைக்கண்டவர் அதாவது அதன் பொருளை அறிந்தவர். வேதத்திலே யாகங்களிலே கொலை விதிக்கப்படவில்லை. யசுர்வேதத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பை வாசித்துப்பாருங்கள். அதிலே அசுவமேதம் விரித்துரைக்கப்பட்டிருக்கின்றது. அதிலே ஒரு உயிராவது கொல்லப்படுவதில்லையென்பதாக நீங்கள் காண்பீர்கள். இக்கொலைகள் பிற்காலத்தில் உண்டானவை; இருக்குவேதத்திலேயுள்ள சில மந்திரங்களுக்கு உரை எழுதினவர்களுள் ஒரு சாரார் அவற்றிலே குதிரையொன்று கொல்லப்பட்டதாக உரை செய்திருக்கிறூர்கள். அந்தவுரை தவறுன உரையென்று பண்டிதர் குருதத்தர் எவர்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நியாயங்காட்டி உறுதிப் படுத்தி யிருக்கிறூர். வேதத்திலே சொல்லப்பட்ட அக்கினி, வருணன், வாயு என்ற பெயர்கள் கடவுளையே குறிக்கும் என்பது அவற்றின் தாதுப் பொருளினுல் தயானந்த சரசுவதி சத்தியார்த்த பிரகாசத்திலே விளக்கியிருக்கிறூர். அன்றியும் இருக்கு வேதத்தின் முதல் மண்டலத்திலேயே கடவுளை அறிவாளிகள் பல பெயர்களாற் சொல்வாராயினும் கடவுள் ஒருவரே என்ற பொருளுள்ள மந்திரம் ஒன்றுண்டு. ஆதலால் இவர்களால் வேதங்களில் ஏற்றப்பட்ட குற்றங்கள் இவருடைய அறியாமையினுல் உண்டானதேயன்றி வேதங்களிலுள்ளவைகளல்லஎன்பதைஅறிக.

சைவசமயத்தைக் காக்கவேண்டிய வேறொருதுறை புறச் சமயிகள்தாக்குதலைத்தடுத்தலாம். புறச்சமயிகள் பள்ளிக்கூடங்களைவைத்துக்கொண்டு சைவப்பிள்ளைகளையும் சைவாசிரியர்களையும் கிறிஸ்தவர்களாக்குகின்றூர்கள். கிறிஸ்து சமயத்தை இந்தவூருக்கு அனுப்பிய [illegible] இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் கிறீஸ்த சமயம் நிலை குலைகின்றது. இப்போது அத்தேசங்களிலே இருந்த பாதிரிமாரின் தொகை நன்றாய்க் குறைந்துவிட்டது; இங்கிருந்து கிறிஸ்தவர்களாக இங்கிலாந்துக்குப் போனவர்களுட் சிலர் அங்கிருக்கும்போது கிறிஸ்த சமத்தை வெறுத்து சைவர்களாகி இங்கு வந்திருக்கிறூர்கள். இங்குள்ள கிறிஸ்தவர்கள் பழையபடி சைவர்களாகி ஒற்றுமையாக வாழ்தல் நன்று. அவர்கள் ஒற்றுமையாகாவிடில் அவர்களாலே சைவசமயத்துக்கு இடர் நேராமல் காக்கவேண்டியது கடன் ஆகும்.

## சைவாசிரியர்கள் விடுமுறைகாலச் சமயபாட வகுப்பு

8-3-46ல் இந்துசாதனத்தில் வெளிவந்த விளம்பரத்தின் பிரகாரம் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை யாதரவில் ஏப்றில் 28ம் 29ம் நாட்களில் ஷ சமயபாட வகுப்பு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும். சைவப்பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளையவர்களும் அவரைப்போன்ற பெரியார்களும் வகுப்பாசிரியர்களாகக் கடமையாற்றுவார்கள். ஒவ்வொருநாளும் வகுப்பு நடக்கும் நேரம்:

மு. ப. 9-30 — பி. ப. 12-30 வரை
பி. ப. 2 — பி. ப. 3 வரை

பாடங்கள்: (அ) சமயத்தின் இயல்பு சைவசமய நூல்கள், (ஆ) பாசங்களின் இயல்பு ஆணவம் மாயை (தத்துவங்களும்) கர்மம் கர்மவிதி, (இ) பதி, (ஈ) உயிர், (உ) தீட்சைகள் சரியை கிரியை. யோகம், ஞானம், (ஊ) பலவகைப்பட்ட முத்திகள்.

வகுப்பிற் சேர விரும்புபவர்கள் எல்லாரும் சேர்ந்து கொள்ளலாம். விண்ணப்பம் அனுப்பியவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பெறும்.

மு. மயில்வாகனம்,
காரியதரிசி.

19-4-46,
யாழ்ப்பாணம்.

## யுத்தத்தினுல் ஏற்பட்ட நஷ்டம்

யுத்தத்தினல் உலகத்திற் பொருட்கஷ்டம் ஏற்பட்டிருப்பதுதான் நமக்குப் பிரத்தியட்சமாகத் தெரிகிறது. ஆயின் அதைவிட வேறு எத்தனை யெத்தனையோ கஷ்டங்கள் நமக்கு வெளிப்படையாகத் தோன்றுமலே ஏற்பட்டிருக்கின்றன, உணவு, உடை, வசிப்பிடம் முதலியவற்றைவிட. சில இடங்களில் மனிதர்களுக்கு—அதிலும் ஆண்களுக்கு—பஞ்சம் அதிகப்பட்டிருக்கிறதாம்.

எத்தனையோ கோடிக்கணக்கான யுவதிகள் தங்கள் கணவன்மார்களைப் பறிகொடுத்துவிட்டு இளமையின் பொலிவிழந்து வாடுகிறூர்கள்

வீயன்ன தேசத்தில் 18 வயதுக்குமேல் 20 வயதுடைய ஆண்கள் 5,493 பேர்தானிருக்கின்றனர் பெண்களோ இதைவிட மூன்றரை மடங்கு அதிகமாக 18,516 பேர்களிருக்கின்றனர். 20 வயதுக்குமேல் 30வயதுக்குட்பட்ட ஆண்கள் 29,000 பேர்; பெண்கள் 87000 பேர் 41முதல் 50 வயதுவரையுள்ள ஆண்கள் 91,554 பேர்; பெண்கள் 1 64,207 பேர். இக்கணக்குப்படி, ஒரு ஆணுக்குச் சராசரி இரண்டரைப் பெண் வீதம் ஏற்படுகிறது.

## கல்கத்தா கம்பன் கழக ஆண்டுவிழா

கல்கத்தா கம்பன் கழகத்தின் இரண்டாவது ஆண்டுவிழா விய வருடப் பிறப்பன்று (14-4-46) ஞாயிற்றுக்கிழமை மாலை 5½ மணியளவில் பேராசிரியர் ஸ்ரீ எல். ஏ. நடேசன் எம். ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முன்னுரையில், கழகம் இலக்கியத்திற்காகச் செய்து வரும் சேவைகளைப் பாராட்டிவிட்டு, “கழகத்தின் சார்பில் வைத்திருக்கும் சரஸ்வதி புத்தகசாலை அமைதியாக அறிவு வளர்ச்சிக்காக அளவற்ற சேவை செய்து வருகிறது. அவரவர்கள் இடத்திலிருந்தபடியே சுலபமாக அறிவை ஊட்டும் மாபெரும் சக்தி புஸ்தகங்களுக்கும் பத்திரிகைகளுக்கும் தான் உண்டு. பலவிதமான புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் தருவித்துச் சுலபமாக ஒவ்வொரு வீடுகளையும் ஒவ்வொரு கலா நிலையமாகச் செய்ய வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு தொண்டு செய்யும் சரஸ்வதி புத்தகசாலையையும் கழகத்தையும் நாம் பாராட்ட வேண்டும்” என்றூர்.

கௌரவ காரியதரிசி ஸ்ரீ பொ. சுப்பையாபிள்ளை அவர்கள் சென்ற ஆண்டு அறிக்கையை வாசித்துவிட்டு “எங்கள் கழகம் கலை வளர்ச்சிக்காக உழைக்கும் சங்கங்கள், சபாக்கள், ‘கிளப்’புக்கள், பத்திரிகை ஸ்தாபனங்கள், புத்தகப்பிரசுராலயங்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் ஆகிய அனைவரோடும் ஒத்துழைத்து அவர்களை உற்சாகப்படுத்தி இயன்ற சேவைகளும் செய்து வருகிறது.

சென்ற ஆண்டுகளில் இலங்கையிலிருந்து வருங்கால மக்களுக்கு அறிவை வளர்க்க ஆசை கொண்டு கல்கத்தா சர்வகலாசாலைப் பரீட்சைக்கு வந்த கலாசாலை ஆசிரியைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் வேண்டும் உதவிகள் புரிந்தது. அவர்கள் பரீட்சையிற் சித்தியடைந்து இப்போது சேவை செய்து வருகிறூர்கள் என்பது அறிந்து மகிழத்தக்கது.

ஏனைய மொழிகளில் உள்ள உயர்ந்த நூல்கள் தமிழ்மொழியில் மொழி பெயர்க்கவேண்டும். அதே போல் தமிழ்மொழியில் உள்ள சிறந்த இலக்கியங்களை வேறு பாஷைகளில் மொழி பெயர்த்துத் தமிழ்த்தாயை உலகம் வணங்கும்படி செய்யவேண்டும். அதுவே எங்கள் கழகத்தின் லட்சியம். அந்த லட்சியம் நிறைவேற நீங்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்” என்று தெரிவித்தார்.

‘சிரோன்மணி’ ஏ. இராமமூர்த்தி சர்மா அவர்கள் கவிச்சக்கரவர்த்தி கம்பரின் லட்சியங்களை எடுத்துச் சொன்னூர்.

ஸ்ரீ ஏ இராமகிருஷ்ண பாகவதரும் ஸ்ரீமதி கோமதி சேஷாத்திரி நாதனும் தமிழிசையை இனிமையாகப் பாடினூர்கள்.

கழகத் தலைவர் ஸ்ரீ பி. எஸ். வரதராஜஐயர் அவர்கள் வந்தனேபசாரம் கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

—கடிதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஹ
சித்திரைமீ ககூ செவ்வாய்க்கிழமை

## புதுவருட சோபனம்

"ஊரிலான் குணங் குறியிலான்
செயலிலான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான்
பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான்
மேலிலான் தனக்கு
நேரிலான் உயிர்க் கடவுளாய்
என்னுளே நின்றுன."

ஆன்மகோடிகட் கெல்லாம் இறைவனுயிருத்தலின் பசுபதியென் னுந்திருநாமத்தோடு விளங்கும் அருள்வள்ளலாகிய பரமேசுவரனுடைய திருவடிக்கமலங்களை மனமாரத் தியானித்துத் தலையாரக் கும்பிட்டு வாயாரவாழ்த்தி அந்த இறைவனுடைய திருவருளை யாசித்து இப்புதுவருடசோபனத்தைச் சொல்லுதல் மரபாகும்; யுத்தந் தொடங்கிய காலந் தொட்டு இற்றைநாள் வரையிலுள்ள வருடங்கள் சில, சோபனஞ் சொல்லற் குரியனவல்லவென்பதுநிசமெனினும்,சொல்ல வேண்டிய நியதிபற்றிச் சொல்லலானேம்; ஒழுக்கத்திற் சிறந்தவர்களாகிய அந்தணரின் ஆசிபெற்று, தங்கள் தங்கள் வருணச்சிரம தருமங்களை மேலாகக் கைக்கொண்டு ஒழுகும் அரசர் வணிகர் வேளாளர் என்னும் மூன்றுவருணத்தார்க்கும் சோபனங் கூறுகின்றேம்; ஏனைய வருண மக்களும் சகல நன்மைகளோடும் வாழ வேண்டுமென விரும்பிப் புதுவருட சுபசோபனம் புகல்கின்றேம்; சைவசமய அனுஷ்டானத்திற்கும், தமிழ்ச் சாதியாரின் நல் வாழ்க்கைக்கும் ஆதாரமாகவுள்ள தாய மகளிர்களனைவருக்கும் விசேஷ சோபனஞ் சொல்லுகின்றேம்; சைவநெறி தழைத்தோங்கும் வண்ணந் தங்களால் இயன்ற தொண்டு செய்துவரும் சைவ சங்கங்கள் தாபனங்கள் சைவாபிமானிகளாகிய இவைகளுக்கும் இவர்களுக்கும் மனப்பூர்வமான சோபனங் கூறுகின்றேம்.

இன்னும் நம் சாதி தேசம் பாஷை யென்னு மிவற்றின் விருத்தியையிட்டு யார் யார் உழைக்கின்றார்களோ அவர்களுக்கெல்லாம் புதுவருடசோபனம் உரைக்கின்றேம்; சற்சமயமாகிய சைவசமயத்தின் பொருட்டும் எங்கள் சொந்த மொழியாகிய செந்தமிழின் பொருட்டும் இயன்ற வரையில் உழைக்கின்றதென நாம் நினைத்திருக்கும் இப்பத்திரிகைப் பிரசுரங்கட்கு விஷயதானஞ் செய்து விளம்பரம் முதலியவற்றை உதவி அபிமானித்தும் இதனை ஆதரித்தும் இதன் விருத்தியையிட்டுத் தங்களாற்பல்லாற்றானும் உழைத்தும் வரும் அபிமானிகளெல்லார்க்கும் மனமார்ந்தசோபனங் கூறுகின்றேம். சில வருடங்களாக நேர்ந்துவரும் உணவுப் பஞ்சம் உடைப்பஞ்சம்என்னுமிவைகளை யகற்றி மக்களுக்கு நேர்ந்துள்ள இன்னல்களை யொழித்துத் திருவருள் பாலிக்கும் வண்ணம் எல்லாம்வல்ல இறைவனை எந்நாளும் வேண்டுகின்றேம்.

---

## 'ஏரோ - கார்'

டெக்ஸாஸிலுள்ள ஒருவருக்கு, மோட்டோர்க்கார், விமானம் ஆகிய இரண்டின் இயந்திரங்களையும் ஒரே வாகனத்தில் அமைத்துப் பார்க்க வேண்டுமென்று தோன்றிற்றும். எங்களில் அநேகருக்கு இதைவிட மேலான எண்ணங்கள் தோன்றியிருக்கலாம்; ஆனுல், அதையெல்லாம் நடைமுறையிற் செய்வதற்கு வேண்டிய வசதிகள் ஏற்படவேண்டுமே! அவருக்கு அந்த வசதிகளெல்லாம் ஏற்பட்டிருந்தமையால் அவ்வாறு ஒரே வண்டியில் இரு இயந்திரங்களையும்அமைத்தார். 'ஏரோ-கார்' என்று அதற்குப் பெயருஞ் சூட்டினுர். அதன் இருபுறமும் விமானத்திலிருப்பதுபோல 30 அடி நீளமுள்ள இரண்டு சிறகுகளை அவர் வைத்தார். தேவையான பொழுது அந்தவண்டி ஆகாயத்திற் பறக்கும்; நிலத்தில் இறங்கவேண்டிய சமயத்தில், சிறகையும், பறக்கும் சக்தி கொடுக்கும் 'புரொப்பெல்ல'ரையும் சுலபமாகக் கழற்றி விடலாம். இவை கழற்றப்பட்டபின் அந்த 'ஏரோ-கார்' நிலத்தில் இறங்கி மோட்டோர்க் காரைப்போலப் பூமியில் ஓடும் விருப்பமான இடத்தில் அதை இறக்கி வீட்டிற்குச் செலுத்தி வந்து 'கரேஜில்' வைத்துவிடலாம். இந்த 'ஏரோ-கார்' மணித்தியாலத்திற்கு 110 'மைல்' வேகத்திற் பறந்து செல்கிறதாம். இது போன்ற ஒரு வாகனத்தை 'டெக்ஸால் கொம்பனி' யொன்று உற்பத்தி செய்து பரீட்சித்துப் பார்த்ததில், 100க்கு 100 வீதம் சரியாக வேலை செய்கிறதாம். வெகுவிரைவில் இந்த 'ஏரோ-கார்' உலகப்பிரசித்தி பெற்றுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## திருநாவுக்கரசு நாயனுர் குருபூசை

நிகழும் வியவருஷம் சித்திரை மாசம் கடு௩் திகதி (27-4-46) சனிக்கிழமை திருநாவுக்கரசு நாயனுர் குருபூசை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை யாதரவில் கீழ்க்காணும் கிரமப்படி நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

முற்பகல் 10 மணி தொடக்கம் 2 மணி வரை நீராவியடி திலகவதியார் மடத்தில் கடவுள் வழிபாடும் திருநாவுக்கரசுநாயனுர் சரித்திரத்தை இடையிடையே சுவாமிகளுடைய தேவாரங்களை ஓதிப் படித்தலும் மாகேசுரபூசையும்.

இரவு 7 மணி தொடக்கம் 9 மணி வரை சைவப் பிரசாரகர் திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் 'திருநாவுக்கரசு நாயனுர்' என்னும் பொருள்பற்றி நீராவிமடம் பிரமஸ்ரீ ந. சோமசுந்தரக் குருக்கள் அவர்கள் தலைமையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ் வித்தியாசாலைமண்டபத்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

இங்ஙனம்,
மு. மயில்வாகனம்,
[illegible]

20-4-46.
யாழ்ப்பாணம்.

## அகில இலங்கைச் சைவ மகாநாடு

இச் சித்திரைமாதம் கூ-ம், எ-ம் அ-ம் நாட்களில் (18, 19, 20-4-46) அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபையின் ஆதரவில் ஷெ மகாநாடு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. சைவாபிமானிகள் தினமும் திரள் திரளாகச் சமுகமளித்து மகாநாட்டைச் சிறப்பித்தனர்.

முதல்நாள் விழாவிற்குச் சைவப் பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம் பிள்ளை அவர்கள் B. A. தலைமை வகித்தார். காலை ஒன்பதரை மணி வரையில், தலைவரவர்கள் வண்ணை ஸ்ரீலஸ்ரீ நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலிருந்து மகாநாட்டு மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டார். பின்னர், பூசை தேவாரம் முதலிய கிரியைகள் முடிந்தபின், திரு. சி. நாகையா அவர்களால் வரவேற்புரை வாசிக்கப்பட்டது. அதன்மேல், தலைவரின் தலைமைப் பேருரை ஆரம்பமாயிற்று. 12 மணி வரையில் திரு மு. ஞானப்பிரகாசம் அவர்கள் B. A., B. Sc., 'அன்பினுல் இன்பம் ஆர்வார்' என்னும் விஷயம் பற்றி அரியதொரு சொற்பொழிவாற்றினர். பின்னர் முற்குறிக்கப்பட்ட மூன்று பிரேரணைகளும் நிறைவேற்றப்பட்டன. பிற்பகல் 4 மணிக்கு திருமயிலைச் செல்வியார் ஸ்ரீமதி கா. சோ. காஞ்சனமாலை அம்மையார் 'சேக்கிழார்கண்ட சைவப்பெருமாட்டிகள்' என்ற பொருள்பற்றி அரிய சொற்பொழிவு நிகழ்த்தினுர்.

அடுத்தநாளாகிய வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழாவிற்குத் திரு சு. நடேசபிள்ளை அவர்கள் B A ;B. L, M. S C. தலைமைவகித்து'அருணகிரிநாதர்' பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தினர். அதன்பின், தமிழர்கள் வாழுகின்ற இடங்களில் தமிழையே உத்தியோகபாஷையாக்கவேண்டும்' என்ற பிரேரணை நிறைவேறியது. அன்று 11 மணியளவில் வித்துவான் திரு. க. கார்த்திகேசு அவர்கள் B. A 'திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர்' குறித்துச் சொற்பொழிவாற்றினர். பிற்பகலில், திரு த. குமாரசுவாமிப் பிள்ளை யவர்கள், திரு. தம்பி க. சிவகுரு அவர்கள் ஸ்ரீமதி கா. சோ. காஞ்சனமாலையம்மையார் ஆகியோர் முறையே 'தெய்வசித்தம்' 'ஒழுக்கம்' 'திருநீற்றின் பெருமை' என்னும் விஷயங்கள்பற்றிப் பேசினர்.

இறுதிநாளாகிய சனிக்கிழமை,ஷெ மகாநாட்டுக்குத் திரு சு. சிவபாதசுந்தரமவர்களே தலைமை வகித்தார் 'சைவக் கிரியைகள்' என்ற விஷயம் பற்றி அவர் செய்த சொற்பொழிவின்பின், ஏற்கெனவே குறிக்கப்பட்டிருந்த இரு பிரேரணைகளும் பிரேரித்து நிறைவேற்றப்பட்டன அதன்பின், திருவாங்கூர் பிரதம நீதிபதியாகிய திருப்புகழ்மணி பிரம்மஸ்ரீ T. M. கிருஷ்ணசாமி ஐயரவர்கள், 'தேவாரமகிமை' என்னும் பொருள் பற்றிச் சிறந்த ஒரு பிரசங்கம் செய்தார். பின், திரு. வே. கந்தையா அவர்கள், பண்டிதை மா. அமிர்தாம்பிகை அவர்கள், ஸ்ரீமதி கா. சோ காஞ்சனமாலையம்மையார் அவர்கள் முறையே 'அருட்குரு' 'கந்தபுராணம்' 'வென்ற ஐம்புலனுல் மிக்கார்' என்னும் விஷயங்கள் பற்றிப் பேசினர்.

இடையிடையே தமிழ்மறையோதலும், சைவத் தேர்தலில் திறமையடைந்த பிள்ளைகளின் உபந்நியாசங்களும்நடைபெற்றன.தென்னிந்திய சைவசித்தாந்த சமாஜத் தேர்தலில் [illegible], குறித்த [illegible] தேர்தலில் திறமையடைந்தவர்களுக்கும் பட்டமும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

ஈற்றில், இரவு 7 மணிவரையில் தலைவர் குறிப்புரையுடனும் தேவார பாராயணத்துடனும் மகாநாடு இனிது நிறைவெய்தியது.

## முடிக்குரிய நியாயதுரந்தரர்

யாழ்ப்பாணத்திலே பிரபல நியாயதுரந்தரராய் விளங்கும் வண்ணுர்பண்ணை திரு. த முத்துசுவாமிப் பிள்ளையவர்கள் இப்பொழுது முடிக்குரிய நியாயதுரந்தரராய் நியமிக்கப் பெற்றுள்ளன ரென்பதை யறிந்து பெரு மகிழ்ச்சியுறலானேம்; திரு முத்துசுவாமிப்பிள்ளையவர்கள் சிறந்த நியாயதுரந்தரரெனக் கண்டு இங்குள்ளார் பலரால் அபிமானிக்கப் பெற்று வருகின்றுரென்பது பலரறிந்த இரகசியம்; பிரபல நியாயதுரந்தரர்களாகக் கருமமாற்றுவார்க்குத்தங் கருமத்தைவிட வேறு பொதுக் கருமங்களில் ஈடுபட்டுழைத்தற்கு நேரங் காண்டல் அரிதெனினும், திரு. முத்துசுவாமிப்பிள்ளையவர்கள் தம் மூதாதையரைப் பின்பற்றி, யாழ்ப்பாணத்துள்ளபுராதனசிவாலயங்களுளொன்றாகிய நல்லூர் நல்லைநாதசுவாமி கோயிலின் தருமகர்த்தாவாக விருப்பதோடுமாத்திரம் அமையாது, வட இலங்கையிலே நடைபெறும் பொதுசன நன்மையின்பொருட்டுள்ள சங்கங்கள், சபைகள், கூட்டங்களில் திரு. முத்துசுவாமிப் பிள்ளையவர்கள் பெரும்பாலுஞ் சென்று உழைத்து வருகின்றுர்; யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி யதிகாரசபையின் கௌரவ காரியதரிசியாகவும், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் உபதலைவராகவும் விசேஷ தொண்டுசெய்து வருகின்றுர்; முடிக்குரிய நியாயதுரந்தரராக திரு. முத்துசுவாமிப்பிள்ளையவர்கள் நியமனம் பெற்றிருத்தல் நியாயவாதப் பகுதியார்க்கும் நியாயத்தை வேண்டிநிற்கும் மக்களனைவர்க்கும் பெருநன்மை விளைக்குமென்பதிற் சந்தேகமில்லையாம்.

---

## திருகோணமலையில் ஏற்பட்ட விபத்து

யுத்தக் கப்பல்களைப் பழுதுபார்ப்பதற்காகத் திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் 20 லட்சம் பவுன் செலவில் நிறுவப்பட்டிருந்த ஒரு மிதக்கும் பாலத்துறை நொருங்கி விழுந்து மூழ்கிவிட்டதாயும், அதிலிருந்த "வாலியன்ற்" என்ற யுத்தக் கப்பலுக்கும் சேதமேற்பட்டதாயும் கடற்படைக் காரியாலயம் இப்பொழுது அறிவித்திருக்கிறது. இந்த விபத்து 1944ம் வருடம் ஆகஸ்ற்மாதம் ஏற்பட்டதாம்; இவ்வாறு பல வருடங்கள்வரை புதினங்களைமறைத்துவைத்திருந்து வெளியிடுவதும் ஒரு புதினந்தான்.

---

## கொள்ளைக் கூட்டத்தினருடன் கொடிய போர்

சென்ற 20ந் திகதி, ஆயுதபாணிகளான 200 பர்மியகொள்ளைக்காரர்கள் டௌங்கூ பகுதியிலுள்ள கியூகிபி நகர பொலிஸ் ஸ்டேஷனைத் தாக்கி அதைத் தீக்கிரையாக்கி ஆங்கிருந்து 26000 ரூபாயைக் களவாடிக்கொண்டு போய்விட்டார்கள், அவர்கள் சில பொலிஸ் அதிகாரிகளையும் பிணைக்கைதிகளாகப் பிடித்துச்சென்றனர். ஒரு 'இன்ஸ்பெக்ட'ரும் மூன்று பொலிஸ்காரர்களும்கொள்ளைக்காரர்களாற் பின்னர் கொல்லப்பட்டார்கள். பின் அவர்களுக்கும் பொலிசாருக்கு மிடையில் நடந்த சண்டையில் 18 கொள்ளைக் காரர்கள் கைது செய்யப்பட்டு 5 பேர் கொல்லப்பட்டனர். கொள்ளைக்காரர்களிடமிருந்து 6 ஜப்பானியத் துப்பாக்கிகளும், 9 பீரங்கிகளும் கைப்பற்றப்பட்டன. மற்றக் கொள்ளைக் காரர்களைக் கண்டுபிடிக்கவும் முயற்சி நடந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நடை வளர்ச்சி

(மட்டுவில் திரு. சே. சிவலிங்கன்)

(முற்றொடர்)

## இலக்கணக்கட்டுப்பாட்டிழுக்கு

இலக்கணத்தையே சரணெனப் புகுந்தார் சிலர் உலக வழக்கிலும் பல நெறி வழக்கிலும் செறிந்து கிடக்கும் சில மொழிகளிற் பிழைகாட்டிச் செல்கின்றனர். அத்தகையன சங்க இலக்கியங்களில் யாண்டுங் கண்டிலே மெனவும் உரைக்கத் தொடங்குகின்றனர். நன்று, நன்று, இவர்தம் செயல். இத்தகையோர் ஓர் - ஒரு; பொருள்கள் - பொருட்கள்; அவர்களுக்கு - அவர்கட்கு என்பனபோன்ற மொழிகளிலே பெரிதும் இடறுகின்றனர். வருமொழி முதலெழுத்து மெய்யாயக்கால் ஒரு எனவும், உயிராயக்கால் ஓர் எனவும் வருதல் இயைபுடைத்தென வுரைக்கின்றனர். அன்னோர் கூற்றிற் கிலக்கண முண்டே. ஆயின், இவை பிறழ்ந்தும் இலக்கியங்களில் வந்திருக்கின்றனவே. தேவர், அருளிய சிந்தாமணியில் "எரிமணிப் பளிக்கு மாடத் தெழுந்ததோர் காமவல்லி" எனவும், "நாதனுறைவதோர் நன்னகருண்டு" எனவும் பிறழ்ந்து வந்திருத்தல் காண்க. "வம்புரிய சிற முத்தமணி மிசை யவர்கட்கலரால்" என்னும் சிந்தாமணி அடியில் அவர்கட்கு என வந்திருத்தலும் கருதற்பாலதே. அவர்களுக்கென்றே எழுதவேண்டுமெனயாரு கூறியீண்டு மயங்கியிருந்த இலக்கணக்., பொருளக வெனவே வரவேண்டு மென்றும் பொருட்களென வராதெனவும் உரைப்பர். உரையாசிரியர்களின் உரையில் அவை மாறுபட்டுக் கிடத்தலைக் காணலாம். இவ்வாறே இலக்கணத்தைக் கட்டியளுஞ் சிலர் குறிக்கோளுக்கு மாறாகவும் இலக்கியங்களை அமைத்துவிடுகின்றனவே. ஆதலின் எவற்றிற்கும் இலக்கணக்குற்றங் காட்டிச் சேறல் இயைபுடைத்தன்று. வேண்டுழி, அவை பிறழ்ந்தும் வரலாம். இலக்கணம் வேண்டுமென்பார் பிறழ்ந்து வருவனவற்றிற்கு இலக்கணம் அமைக்கலாகாதோ. புதியன புகுதலை எவருந் தடுக்கமாட்டாரே. காமாலைக் கண்ணனுக்குக் கண்டனைத்தும் மஞ்சளாகத் தோற்றமளித்தல் போலவே இத்தகையோர்க்கு யாண்டும் இலக்கணக்குற்றஞ் செறிந்து கிடக்கும். காமாலை கண்ணொடு என்றுந் தோற்றமளிக்காது அதனைப் போக்க முயற்சித்தலே ஏற்புடைத்து.

## கலப்புத் தமிழ்

இற்றை நாளுலகில தனித்தமிழ்க் கட்சியாருக்கும் கலப்புத்தமிழ்க் கட்சியாருக்குமிடையிற பெரும் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இவற்றுள் எது இனிமையுடைத்தென்பது ஆராய்ச்சிக்குரியதே. அவ்வக் கட்சியார்க்கவை இன்பம் பயத்தலேற்புடைத்தே. சிலர் இனிமையையும், வேறுசிலர் உறைப்பையும், இன்னுஞ்சிலர் புளிப்பையும் விழைவர். இஃது உலகியல்பு. அவ்வாறே தமிழ்க்கட்சியார் செயலுமெனக. தமிழில் வேண்டிய சொற்கள் இருக்கும்போது பிறமொழி முதலியவற்றில் இரவல் வாங்குவது ஏற்றதோவென வுரைக்கின்றனர். இஃது உண்மையே. ஆயின் புதிய விடயங்களைக் கண்டறிந்து சேறுமுலகில அனைத்தையுந் தனித்தமிழில் உரைக்கவேண்டுமமென்பது பொருத்தமுடைத்தன்று. கலைச்சொற்கள் சிலவேனும் மொழிகளினின்று எடுத்துக் கலத்தலே ஏற்புடைத்து. தங்கருத்தை வெளிப்படுத்தற்கமைந்ததே மொழி. அனைவருந் தெளிவுறும் வகையிலேயே மொழிதல் வேண்டும், விடயத்தைத் தெள்ளத் தெளிவுறச் செய்தற்குத்தக்க சொற்கள் இன்றியமையாதன. விடயத்தைத் தெளிவுறச் செய்வதற்கு சொற்களைப் பின்னைத் தெளிவுறச் செய்யத் துணிதல் இயைபுடைத்தன்று. முகம் என்றக்கால் அனைவரும் பொருள் தெளிவர். அஃது வடமொழியெனக் கணித்து வதனமெனத் தனித்தமிழி லுரைத்தக்கால் இன்றைய தமிழுலகில் எத்தனைபேர் பொருள் தெளிவர்? பைசிக்கிள் இருபதாம் நூற்றாண்டளவிற் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் எந்திரமே. எனவே சங்க இலக்கியங்களில் யாண்டும் இதன் பொருள் இருத்தல் இயையாது. அதனைக் கலப்புத் தமிழ்க் கட்சியார் 'துவிச்சக்கர வண்டி' யெனவும் தனித்தமிழ்க் கட்சியார் 'ஈருருளி' எனவும் வழங்குகின்றனர். இவ்விரு சொற்களுள், துவிச்சக்கரவண்டி யென்பது தமிழில் ஐம்பது வீதமானோர்க்கே புலப்படும். ஈருருளி ஐந்து வீதமானோர்க்கும் புலனாகுமோ வென்பது ஐயமுடைத்தே. ஆயின் பைசிக்கிள் என்றக்கால் அனைவருந் தெளிவர். எனவே தமிழிலும் பைசிக்கிள் என நுழைப்பதால் போக்கு இழுக்கின்றே. எம்மொழியிலுங் கலைச்சொற்கள் கலந்திருக்கின்றனவே. அங்ஙனமாயின தமிழிலேன பிறமொழிகள் கலந்திருக்கலாகா. பேடியோ, பெற்றோல், அல்கஹோல் என்பனபோன்ற சொற்கள் ஆங்கிலம், இலத்தீன், கிரீக்கு முதலிய மொழிகள் அனைத்திலும் இருக்கின்றனவாம், இற்றைய ஆங்கில உலகை எடுத்து நோக்குமின. எம்மொழிச் சொற்கள்தாம் ஆங்கிலத்தில கலவாதிருக்கின்றன. மிளகு தண்ணீர் என்னும் தமிழ் மொழியின மருஉவன்றோ ஆங்கிலத்தில "மிலகு தன்னி" எனப்படுவது, 'பண்டோல்' என்பதெம்மொழி? பந்தலின் மருஉவே. அரிசி யென்னும் சொல் றைஸ் (Rice) என யாண்டும் பரவியுளதன்றோ. ஆங்கிலம் எம்மொழியிலும் இரவல்வாங்கி எழில்பெற்றிலங்க எந்தமிழ்மொழி பழைய கொள்கைகளைப் பற்றி முதலிட்டுக்கொண்டிருக்கிறதேயொழிய வளர்ச்சியடைந்திலது. பண்டை நாளில் வளம்பெற்றோங்கிய தமிழ் இற்றைநாளில் வளங்குன்றிச் செல்வதனைக் கண்ணுறுங்கால் வருந்தாதார் யார்கொல்? ஆதலின் வேண்டுழிப் பிறமொழிச் சொற்களையும் கலந்து தமிழன்னையை வளமுறச்செய்தலே எமது புலவர்களின் கடமையாகும். பிறமொழிச் சொற்களைக் கலத்தல் இயைபுடைத்தென்றக்கால் அனைத்திற்கும் இரவல் வாங்கவேண்டுமென்பதன்று. கலைச் சொற்கள் (Technical Terms) சிலவற்றைக் கலந்து கொள்ளலாம். இச்செயல தனித்தமிழ்க் கட்சியாரை வருத்தினும தமிழ் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகின்றது. ஆங்கிலம், இலத்தீன், கிரீக்கு, ஜெர்மன், பிரான்சு என்னும மொழிகளனைத்தும் ஆரிய மொழிகளெனவும், அவற்றின் சொற்களிற் பெரும்பாலன ஒரு பகுதியைச் சேர்ந்தனவென்றும், ஆதலின் ஆங்கிலத்தில் அம்மொழிச்சொற்கள் கலத்தல் ஏற்புடைத்தாகுமெனவும், தமிழ் தனிமொழியாதலின் பிறமொழிச்சொற்கள் கலத்தலியைபுடைத்தன்றெனவும் தனித்தமிழ்க் கட்சியார் தங்கொள்கையை வற்புறுத்துவர். அங்ஙனமாயின ஆரிய மொழியல்லாத தமிழ்மொழிச் சொற்களை ஆங்கிலம் இரவல் வாங்கியமையை என்னென்பது! சாலவும் இரவல் வாங்குதல ஏற்புடைத்தாகாது தான். ஆயின வேண்டுழி இரவல் வாங்கத் தான் வேண்டும். இதோ உலகியல்புகாண்...

## பாரதியார் காட்டும் பாநெறி

பாரதியாரை அறியாதார் உலகில் ஒருவரிலர். இளஞ்சிறார் தொட்டு நரைத்தோர் ஈறாகப் பாரதியாரின்றோடு வுடன் உமிழ்நீர் சுரப்பர். தித்திக்கும் தீம்பாடல் பல யாத்தமையே எதுவாகும். பாரதியார் பாடல் அனைத்தும் சனிசகத்தைச் சேர்ந்தன. இற்றையுலகில் தமிழ் மணர்ககார் பலரும் அன்னை உச்சிமேற் கொண்டு மெச்சினார்க்கினியராக் காகின்றனர், பாரதியார் என்பது சிறப்புப் பெயரேயன்றி இயற் பெயரன்று. ஆயின் வரகவி சுப்பிரமணிய பாரதியாருக்கு அஃது இயற்பெயராய் அமைந்துவிட்டது. காவலர் என்புழி யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலரைக் குறித்தாங்கேயென்க. பாரதியார் தமிழ்ப்பற்றுடையவர்; ஆங்கிலமும் அறிந்தவரே; இற்றைய வுலகிற் றமிழ்மொழி நிலைமை கண்குணர்ந்தவர். தமிழுக்காகப் புரிய வேண்டிய தொண்டினைத்தையும் எடுத்துரைக்கின்றார். அஃது,

பிறநாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல்
வேண்டும்
இறவாத புகழுடைய
புதுநூல்கள்
தமிழ்மொழியி லியற்றல்
வேண்டும்
மறைவாக நமக்குள்ளே
பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை;
திறமான புலமையெனில்
வெளிநாட்டார்
அதைவணக்கஞ் செய்தல்
வேண்டும்

என்பதுவே. இக்காலிலெம்மொழியிலுங் கலைகள்பெருகிச்செல்கின்றன. தமிழ் மக்களோ கண்மூடித்தனமாகத் தூங்கிக்கொண்டிருக்கின்றனர். விழிமின! சாத்திரங்களைப் பிறமொழியிலிருந்து பெயர்த்து எழுதுமின்! புதுநூல்களை இயற்றுமின! என்று கூக்குரலிடுகின்றனர், தமிழ்மொழியிலுள்ள நூல்கள் பல பிறமொழியாளரால் மொழிபெயர்த்தெழுதப்பட்டிருக்கின்றன. வள்ளுவர் குறளின் வன்மையை எம்மினும பிறமொழியாளரன்றோ நன்குணர்ந்திருக்கின்றனர். எம்மிலிருந்து பிறர் பயன்பெறுகின்றார்களேயன்றி நாம் பிறரிலிருந்து பயன் பெறுகின்றிலமே. இச்செயல் தமிழன்னைவாதம் இரத்தத்திற் செறிந்து கிடக்கின்றது போலும். அச்செயலிலும இத்தகைத்தே இவர் தஞ் செயலை. மறைவாகப் பழங்கதைகளைப் பேசிக்கொண்டிருப்பதை யொழித்து தமிழ்த்தாய்க்கு நல்லுருட்டி வளனுறச்செயல் எங்கடனே.

தமிழ் மக்கள் பலர் பிறமொழி மயக்கத்தாற் பீடிக்கப்பெற்றுத் தமிழ்க்குருடராய்த் திகழ்கின்றனர். வெள்ளத்தின் பெருக்கைப் போற் கலைப்பெருக்கும் கல்விப் பெருக்கும் மேவுமாயின் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம் விழிபெற்றுப் பதவிகொள்வர். அதுபோழ்தே தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார். ஆதலின் நாம் சேமமுறவேண்டும். இதன்பொருட்டுத் தெருவெலாம் தமிழ்முழக்கஞ் செய்தல்வேண்டும். அன்றியும் உலகனைத்தும் இகழ்ச்சிசொலப் பான்மைகெட்டு நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ. தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தலேற்புடைத்து. பாரதியரின் உணர்ச்சி ததும்பிய பாடல்களை நோக்குமின். அவர் கூற்றைக் கடைப்பிடிமின. அதுபோழ்து தமிழ் தழைக்கவே வளர்ந்து மங்களமே. "பிறமொழிகளிலே தமிழ்மொழிபோல இனிதாவதெங்குங் காணோம்" என்பதுண்மை பெறும்,

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### செவ்வாய் ஏப்ரல் 23

காலை 7.15 கிராமபோன் 7.20 தமிழில் செய்திகள் 7.30 கே ஆர் வி ராமநாத சாஸ்திரி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 பழனி விஜயலக்ஷ்மி 8.30 எஸ் ஷேக்மஹ்பூதீன் பாட்டு 9 முடிவு.

1 கிராமபோன் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 கே ஆர் வி ராமநாதசாஸ்திரி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கோடைக் கல்வி 2.30 முடிவு.

மாலை 5 என் ஆர் கிருஷ்ணையர் புல்லாங்குழல் 5.40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 கே என் ராஜம் கே என் கமலம் பாட்டு 6.30 என் எஸ் கிருஷ்ணன் கோஷ்டி 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7.15 சேவைக்கு வசதி 7.30 தமிழில் செய்திகள் 7.45 ரேடியோ நாடக இசை 8 கே என் ராஜம், கே என் கமலம்பாட்டு 8.30 என் ஆர் கிருஷ்ணையர் புல்லாங்குழல் 9.15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 கனம் கிருஷ்ணையர் பாடல்கள் 10 நீங்கள் கேட்டவை 10.30 முடிவு.

### புதன் ஏப்ரல் 24

காலை: 7.15 கிராமபோன் 7.20 தமிழில் செய்திகள் 7.30 லால்குடி ஆர் நீலமேகம் பிள்ளை வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 டி பலராம் கோஷ்டி 8.30 திருப்பத்தூர் பாக்யலக்ஷ்மி பாட்டு 9 முடிவு.

1 கிராமபோன் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 லால்குடி ஆர் நீலமேகம்பிள்ளை வயலின் 2 தமிழில் செய்திகள் 2.05 கோடைக்கல்வி 2.30 முடிவு.

மாலை 5 திருப்பத்தூர் பாக்யலக்ஷ்மி பாட்டு 5.40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 திரை இசை 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7.15 புதிய வெளியீடுகள் 7.30 தமிழில் செய்திகள் 7.45 நமது தபால் பெட்டி 8 தேவி சந்திரகுப்தம் நாடகம் 9 ஆங்கிலப் பேச்சு 9.15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஐரோப்பிய சங்கீதம் 10.30 முடிவு.

### வியாழன் ஏப்ரல் 25

காலை 7.15 கிராமபோன் 7.20 தமிழில் செய்திகள் 7.30 திருப்பத்தூர் செல்லம்மாள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 பி அழகுரத்னம்மாள் கோட்டு வாத்யம் 8.30 ஏ ஆர் ராமசாமி பாட்டு 9 முடிவு.

1 கிராமபோன் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 ஏ ஆர் ராமசாமி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கோடைக் கல்வி 2.30 முடிவு.

மாலை 5 திருப்பத்தூர் செல்லம்மாள் பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 பி அழகுரத்னம்மாள் கோட்டு வாத்யம் 6.30 அறுவடை 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7.15 இலக்கிய வாசகம் 7.30 தமிழில் செய்திகள் 7.45 பி பலைப்ப சாஸ்திரி பாட்டு 9.15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 பத வர்ணம் 10 இசைவேளை 10.30 முடிவு.

### வெள்ளி ஏப்ரல் 26

காலை 7.30: கிராமபோன் 7.20 தமிழில் செய்திகள் 7.30 எஸ் சுந்தரம் ஐயர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 ஜயலக்ஷ்மி ராஜகோபாலன் பாட்டு 9 முடிவு.

1 கிராமபோன் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 ஜயலக்ஷ்மி ராஜகோபாலன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கோடைக்கல்வி 2.30 முடிவு.

மாலை: 5.30 கும்பகோணம் வி சிவசுப்ரமணிய பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 5.40 குரான் - ஷாப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 மாலை இசை 6.30 எச் எம் வி ராத்தகோஷ்டி 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7.15 செய்தி விளக்கம் 7.30 தமிழில் செய்திகள் 7.45 கும்பகோணம் வி சிவசுப்ரமணிய பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 8.30 சிலம்பு நாடகம் 8.46 எஸ் சுந்தரம் ஐயர் பாட்டு 9.15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 உலக விவகாரங்கள் 10 இசைவேளை 10.30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கைச் சைவ இளைஞர் மகாநாட்டில்
திரு. சி. நாகையா அவர்கள் நிகழ்த்திய

# வரவேற்புரை

சிவநேயச் செல்வர்களாகிய சகோதர சகோதரிகளே! உங்களெல்லோருக்கும் எமது வணக்கத்தையும் அன்பையும் சமர்ப்பிக்க விரும்புகிறேன். அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபை, அமைவாய்க்க எங்கள் சைவசமயத்திற்குச் சென்ற சில ஆண்டுகளாகப் பெருந்தொண்டாற்றி வருவதை நீங்கள் யாவருமறிவீர்கள். பண்பும் பயனுமுற 7 ஆண்டுகள் நிறைவேறின. 8 ஆம் ஆண்டுபூர்த்தியான விழா இன்று தொடங்குகின்றது. மூன்றுநாள் நடைபெறுமென்று மகாசபையினர் விடுத்த விளம்பரத்தினால் நீவிர் அறிந்திருப்பீர்கள். இறைவன் திருவருள் எங்களெல்லோருடனுமிருந்து இங்கு நடக்கவிருக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் இனிது நிறைவேற்றுமாறு இறைவனது திருவடிகளை வாழ்த்தி வணங்கி வழுத்துவோமாக.

இந்த மகாசபையார் என்னையும் ஒரு பொருளென மதித்து மிகவும் கண்ணியம் வாய்ந்த ஒரு கடமையை ஆற்றும்படி பணித்துள்ளார்கள். என்னிலும் பார்க்கப் பெரியவரொருவர் அதைச் செய்வதுதான் தகுதியுடைத்தென்று எண்ணுகிறேன். இத்தகைய சிறப்பு வாய்ந்த கைங்கரியத்தைப் பாண்டிநாட்டுப் பழம்பெருஞ் செல்வம் நலம் வாய்ந்த பண்டையாசிரியர் எழுதுவாராகில், தம் மலர்ந்த முகத்தினாலும், கனிந்த சொற்களாலும் இனிய கருத்துக்களாலும் சிவந்த உளப்பாங்கினாலும் உங்களை வரவேற்பர். அப்பொழுதுதான் உங்கள் வரிசைக்கேற்ற வரவேற்பாகும். மகாசபையாருடைய விருப்பமும் நிறைவேறும். ஆனால் மகாசபையார் செய்துவரும் தொண்டோ அளப்பருமாண்புடைத்து. ஆகையினால் அவர் தங் கட்டளையாகிய தகுதிகொண்டு உங்களை வரவேற்க முயலுகின்றேன்.

சிவநேயச் செல்வர்களே! உங்கள் வரவு நல்வரவாகுக! சிவநேயச் சீமாட்டிகளே! உங்கள் வரவு நல்வரவாகுக! மகாசபையின்பேரால் உங்களிருவிரையும் அன்போடியைந்த வணக்கத்துடன் வரவேற்கின்றேன். முத்தி தரும் தெய்வசபையைக் காண்பதற்குச் சேர வாருங்கள்; சைவ சமயமே சமயம், சமயாதீதப் பழம்பொருளைக் கைவந்திட உழைக்க வாருங்கள். பொய்வழியிலுஞ் சமயநெறி புகுத வேண்டாம். முத்திதரும் தெய்வசபையைக் காண்பதற்குச் சேர வாருங்கள்; உறவுபூண்டு ஒற்றுமை வளர்த்த தெய்வச் சமயமாம் சைவசமயம் இடருற்றது! வாருங்கள்! இடர்களையவும், அதன்பின் வளர்க்கவும் வாருங்கள்! உங்கள் வரவினாலும் ஆர்வ உற்சாகத்தினாலும் மகாசபையார் பத்துமடங்கு வரப்பெறுவர்களாய் மேலும் மேலும் ஆக்கம்பெற உழைப்பார்களென்பது திண்ணம், மூக்காலும் திண்ணம்.

இந்த மகாசபையார் சார்பாக உங்களனைவரையும் வரவேற்கும் கொண்டிலீடுபடுகின்றமையால், அவர்தம் மனப்பாங்கையு மெடுத்து உங்களுக்குக் கூறும்பொறுப்பையு முடையேனெனக் கருதுகிறேன். ஒருவகையில் பெருமிதங் கொண்டவர்களாயுமிலர்; ஒருவகையில் மனங்கலங்கினவர்களாய்ச் சோர்வுற்றுத் திருவருளை எதிர்பார்த்து வாடியிருக்கிறார்கள். தங்கள் கல்வியினாலும் தங்களுக்கேற்பட்ட தெய்வசமயமாகிய சைவசமய பாக்கியத்தை நினைந்து நினைந்து பாராட்டிப் பாராட்டிப் பெருமிதப்படுகிறார்கள். மற்றப்பக்கத்தில், சைவமாகிய எங்களுக்குள் ஒற்றுமையில்லையே; கிறிஸ்தவ சபைகள் யாவும் தங்களுக்குள் மிகவும் ஒற்றுமைப்பட்டுத் தங்கள் சமயத்திற்காக ஏகமனமுடையவர்களாயிருப்பதைக் கண்டபின்னரும் எம்மானஞ் சிறிதுமற்ற அசடர்களாயிருக்கிறோமே யென்று வருந்துகிறார்கள். புத்த சமயத்தவர்களானும் தங்கள் சமயம் வளர்ப்பதிற் பெரும் ஒற்றுமை காட்டுவதைக் கண்டபின்னரும் சைவமக்கள் பேடிகளைப்போலக்கொண்டே வாழாவிருப்பதைக்கண்ட மகாசபையார் மிகவும் மனச்சோர்வுற்றிருக்கின்றார்கள்.

## எங்கள் நற்சமயமென்றுலோ

1. இறைவாக்காகிய வேத சிவாகமங்களின் வாய்ப்புகொண்டது. இது செய்யத்தகும், இது செய்யத்தகாதென்ற விதிவிலக்குகளைக் கொண்டியக்குவது. மனம்போன போக்கெல்லாம் சென்று சென்றலையும் துர் அதிஷ்டமிதற்கில்லை. சிற்றறிவும் சிறுதொழிலும் பல்பிணியுமுள்ள மக்களால் வகுக்கப்பெற்று ஒருகாலத்திலும் ஒருகுழுவினர்க்கு மாத்திரம் பயனளிப்பதும், இன்னொரு காலத்திலுதவாதும் பலருக்குப் பயன்படாமற் போகின்ற கேவலபிரமாண நூல்களையுடையதுமல்ல. உலகாயதம் முதல் சுத்தாத்துவித சைவசித்தாந்தம் ஈறாயிலுள்ள மார்க்கங்களெல்லாவற்றையும் தன்னகத்தடக்கிக் கொண்டு தான் அவைகளுக்கெல்லாம் மேலாய் இராசாங்கத்தமர்ந்த இராசேந்திரத்துடன் விளங்குவதன்றோ.

2. கர்மவிதிவினையுமறு பிறப்புண்மையும் ஏற்றுக்கொண்டு சோபான முறையில் மக்களனைவரையும் படிதாமிட்டு அங்கிருந்து படிப்படியாய் அவர்களை மேல்மேல படிகளில் உயர்த்துச்சென்று கடைசியில் நிச்சயமாய் முத்தியெய்தச்செய்யும் சிறந்த மந்திரங்கள், கிரியைகள், தோத்திரங்கள் ஆசாரங்கள் கொண்டனவாய்ச் செப்பனிடப்பட்ட மார்க்கமன்றோ.

3. பழமையனவென்று சொல்லப்படும் எச்சமயத்திலும் பழமைப்பதாய், புதியனவென்று சொல்லப்படும் எச்சமயத்திலும் புதிதாய் நிலவும் சிறப்பெற்ற குணமுடையதாய் ஆதித்தபோன்றது எங்கள் சமயம்.

4. முப்பொருள் உண்மை நிலைத்திடமும் சுத்தாத்வித சம்பந்தமுமுள்ளவனக்கிடச் சிறப்பும் ஞானநூலாராய்ச்சி செய்வார்க்குப் பெருவிருந்தாயுமுள்ளன. அனுபூதியிற்றலைப்பட்டோர்க்குத் தேனெனவும் பாகெனவும் உவமிக்கொண்ணாத்தித்திப் பேற்றுப் பரம்பொருளின் தண்ணிழலை ரசிக்கும் ஆனந்தமுடையது. சமய குரவர்களும், சந்தான குரவர்களும் தொகையடியார்களும் தத்தம் அனுபவத்தில் வேத சிவாகமங்கள் செப்பிய உண்மைகளைக் கண்டுகண்டு, உவந்து உவந்து உருகி உருகிப் பாடிய தோத்திரங்களும் சாத்திரங்களும், வாழ்வாங்கு வாழ்ந்துகாட்டிய உதாரணங்களும் மலிந்து பொலிகின்றதாகும் பொக்கிஷ சுரங்கமன்றோவெனப் பெருமை பாராட்டிப் பெருமிதப்படுவார்கள்.

இதற்குமாறாக நெஞ்சழிந்து சோர்வுபடக் காரணம் பலப்பலவுண்டு. அவைகளில் இரண்டுமூன்றை மாத்திரம் இங்கு எடுத்துச் சுருக்கிக் கூறுவேன்,

என்றும்பழியாப் பெருமையினையுடையனவும் இறை வாக்காயுமுள்ள வேத சிவாகமங்களையே, சைவசமயத்திற்காக உழைக்கவென்று திரண்டிருக்கும் சபைகளில் ஒருசிலர்; தள்ளிவைத்திருப்பது [illegible] கதை. வாம்பின் [illegible] வஞ்சகயில்லாமலேயே விரோதம் போலவும் பயனற்றுப் போகுமென்றவர் நினைத்திலர்போலும். வருத்தப் படுமாவேஷக்காரிலமுந்த இங்குவாரவ்ச் சியற்ற கொள்கை சைவசமய அஸ்திபாரக் கல்லையே பெயர்த்தெடுக்குவிட்டதென்று அறிந்திலர்போலும். சைவசமயக் கொள்கைகள் யாவற்றிற்கும் பிரமாணமாயிருக்கும் வேத சிவாகமங்களையே தூஷித்துக் கடிந்தொதுக்கித் தள்ளிவைத்தால் சைவம் நிற்பதெப்படி? சைவ சாதிக்கியத்தைத் தோற்றமைப்பதெப்படி? இதனையுற்று மகாசபையார் மிகவும் வருந்துகிறார்கள்.

2. சைவசமயத்திற்கிரு கண்களென்று மதித்தவந்த வடமொழியுந் தென்றமிழும் ஒழிக்கப்பட்டு இல்லாமற்போகின்ற தருவாயிலிருக்கின்றன. சைவர்களிற் சில பிராமணர் தமிழனையும் தமிழையும் ஒதுக்கவும் அருவருக்கவும் தலைப்பட்டனர். பிராமணரல்லாதார் வடமொழியையும் அதன்பாலுள்ள வேத சிவாகமங்களையும் பிராமணர்களையும் தூஷிக்கத் தலைப்பட்டனர்.

இக்கக் கொள்கைக்கு வாய்ப்பாக அரசியல் வாதிகளால் இந்தியாவிலும் இங்கும், சிறப்பாக இங்கு சிங்களமக்களாலும் கிறிஸ்தவர்களாலும் தமிழ் ஒதுக்கி வைக்கப்படுவதையும் நாம் காணலாம். எனவே வேத சிவாகமங்களும் அவைகளிருக்கும் பாஷைகளும் மக்கட்பாஷைச் சண்டைகளினாற் சைவசமய குருவகுப்பினராகிய பிராமணரும் நிந்திக்கப்பட்டும் தண்டிக்கப்பட்டும் வருவதை நாம் காணலாம். எனவே, இறைவாக்காயும் பிரமாண நூல்களாயுமிருக்கும் வேதங்களும் சௌராகமமாதி சிவாகமங்களும் தள்ளிவைக்கப்பட்டன. 3 வடமொழி தென்தமிழ் புறக்கணிக்கப்பட்டன, சமயம் வளர்க்க சமய குருவகுப்பினர் நிந்திக்கப்பட்டுங் கண்டிக்கப்பட்டும் வருகின்றனர். பிரமாணநூல், அவைகள் கொண்ட பாஷைகள் சமயத்தை வளர்க்கும் சமய குருமார் கடிந்தொதுக்கப்படுவதைக் கண்ட மகாசபையார். இதைவிட இருட்டான காலம் எப்போசாவது வருமோவென்று ஏம்பி ஏம்பிச் சோர்வுற்றிருக்கின்றனர். மங்காவில் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை நாயனாரும் அனுபவித்த சமணப் பெருக்கிலும் சமணத்தைச் சார்பாயெழும் உலோகாயதமாகிய அரசியல் மோகம் நாட்டை விழுங்கியதென்று காண்கின்றனர், புத்தச் சார்பாயெழும் சமதர்மக் கட்சியினரும் சேனநாயகச் சார்பாயெழும் பொதுவுடைமை அல்லது சமதர்மக் கட்சியினரும் சமயக்கொள்கைகளைக் கொல்லக் கொண்டனவென்றும் மகாசபையார் வருந்துகின்றனர். இறைவன் திருவருளையே எதிர்பார்த்திருக்கின்றனர். சுருக்கிச் சொல்லுமிடத்து, சைவசமயத்தவர்களுக்கிலே 'பரிதபிக்கக்கூடிய தொன்றுதம். இதை நிவிர்த்திசெய்ய வாருங்கள். எங்கள் அருமையாய்ந்த தாயாகிய சைவசமயம் பட்டாடையுடுத்துப் பணிகலன்பூண்டு செங்கோலேந்தி அரியாசனத்தமர்ந்திருந்தாளன்றோ! இருக்குந்தகைமையுடையவளல்லளோ? அவள் தம் மக்களாகிய உங்களது காலத்து, யாவராலும் பழித்து இழித்துத் தள்ளப்பட்டிருப்பதைக் கண்டு நீங்கள் பாண்மையுறப் பேசித்திரிதல் உங்களுக்கும் சிறப்போ? எங்கள் சமயாசாரவர் சமயம் வளர்க்கவில்லையோ? நீங்களவர்களிலும் உத்தமபடியுடையீர்தா எல்லாப்பதமும் சரியைகளுக்கென்றீர்கள்.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

## அப்பர் தேவாரம்

திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை

அப்பர் சுவாமிகள் தாண்டகவேந்தென்று அழைக்கப்படினும், அவருடைய எல்லாப் பாடல்களும் சுவை நிரம்பியன. ஒவ்வொரு பாடலும் இன்பரசம் ஊட்டுவது, பக்திகதேன் பொழிவது, இறைவனிடத்தே அன்பை விளைப்பது, பிறவிப் பிணிவைப் பனிப்பனி எடுத்துரைக்கும் கருணை போற்றற்குரியது. அவருடைய பாடல்களில், பல பழமொழிகளும் புராண சரிதங்களும் எடுத்துக்காட்டாக வந்துள்ளன. நயமுள்ள பாடல்கள் உருக்கத்தைச் சிறந்தவை, பலவிதமாக எமக்கெல்லாம் இறைவனை வழிபடும் முறையைப் போதிக்கின்றார். இக்காலத்தில் விகடத்தைச் சனங்கள் பெரிதும் விரும்புகின்றனர், அவ் விகடத்தையும் சுவாமிகள் கையாண்டுளார். ஹாஸ்யமான சில பாடல்களும் அவருடைய தேவாரங்களிற் காணலாம். அவையாவன:-

நாகத்தை நங்கையஞ்ச நங்கையை
  மஞ்ஞையென்று
வேகத்தைத் தவிர நாகம் வேழத்தி
  னுரிவை போர்த்துப்
பாகத்தி னுமையோர் தல் செய்யாத்
  நங்களை மின்னென்றஞ்சி
ஆகத்திற் கிடந்ததாக மடங்குமா
  ரூரனார்க்கே

சிவபெருமான் உமாதேவியாரோடுகூடி, பாம்பைத் தமது திருமேனியில் ஆபரணமாகப் பூண்டும் பிறைச் சந்திரனைச் சடாமுடியிற் சூடியும் யானைத்தோலைத் தமது ஆடையாக உடுத்தும் விளங்குகின்றார். பாம்பானது உமாதேவியாரை மயிலெனக் கண்டு மருண்டு இறைவனுடைய யானைத்தோற் போர்வையில் மறைந்து மேல் தலையை நீட்டுகின்றது. அங்கே மின்னல்போன்ற முனைமுனைப்பிறைபைக் காண்கின்றது. உடனே [illegible] தலையை [illegible] ஒடுக்கிக்கொள்ளுகின்றது. உமாதேவியாரை மயிலாகவும் பிறைச்சந்திரனை மின்னலாகவும் உருவகஞ் செய்திருப்பது படித்தின்புறத்தக்கது. பாம்புக்குப் பகையானவை மின்னலும் மயிலுமாம். இக்கருத்தையே சிறிது மாற்றி வேறொரு திருப்பாடலிற் கூறுகின்றார் நமது அடிகளார். அப்பாடல் வருமாறு:—

கிடந்தபாம் பருகு கண்டரிவை
  பேதுறக்
கிடந்தபாம் பவளைப்போர் மயிலென்
  னறபுறக்
கிடந்த நீர்ச்சடைமிசைப் பிறையு
  மேங்கவே
கிடந்து தானகுதலைக் கெடில
  வாணரே.

சிவபெருமான் அணிந்துள்ள பாம்பைப் பார்த்து உமாதேவியார் பயப்படுகின்றனர். உமாபிராட்டியாரை மயிலென்றெண்ணிப் பாம்பு பயப்படுகின்றது. இறைவனது கங்கைவார் சடையின்மீதுள்ள பிறைச்சந்திரனும் பாம்பைக்கண்டு பயப்படுகிறான். இவற்றையெல்லாம் பார்த்து இறைவன் எலும்பு மாலையாக அணிந்துள்ள மண்டையோடு சிரிக்கின்றது என்பது உருவகம். எம்பெருமானுடைய திருக்கோலத்தை ஓர் நாடகமாகத் திரித்துக்காட்டியிருக்கும் நாயனாரது திறமையை என்னென்று கூறுவது? பாம்புக்குப் பகை மயில், சந்திரனுக்குப் பகை பாம்பு (இராகு) எம்பெருமான் அப்படிப் பலவாறு சித்தரித்து எமக்கெல்லாம் பக்தியூட்டுகின்றார் நமது ஆசாரிய சுவாமிகள். இவ்வரிய பாடல்களாலும் போந்த உண்மை என்னவோவெனின், பாசக்கூட்டமானும் சிவப்பேறு கிடைக்குமெனபதாம்.

முன்னெறியாகிய முதல்வன்
  முக்கணன்
தன்னெறியே சரணாதல்
  திண்ணமே
அந்நெறியே சென்றங்கடைந்தவர்க்
  கெலாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரவேற்புரை

3-ம் பக்கத் தொடர்ச்சி

காலத்தாற் கிட்டி எங்கள் யாழ்ப்பாண நாட்டவராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின்பின் வந்தவர்களல்லவோ நீங்கள்! உங்கள் கடமைகளை மறந்திருப்பதேனோ? சுருக்கிக் கூறுகில், திலகவதியார் மருணீக்கியாரைச் சைவத்துக்குழைக்கவைத்தார். மங்கையர்க்கரசியார் பாண்டிமாறனை நெடுமாறனுக்கிய பண்பை நீங்களறிவீர்கள். சகோதரிகளே உங்கள் தொண்டு அதுவேயாகும். திருஞானசம்பந்தர் மங்கையர்க்கரசியாருடைய வேண்டுகோளை நிவிர்த்தி செய்தார். சகோதரர்களே அதுவே யுங்கள் கடன்.

எங்கள் சமையத்தின் மேன்மை இவையிவையென ஒருவாறு சுட்டிக் காட்டினேன். எங்கள் சமயத்திற் குற்ற இடையூறுகள் இவையெனவும் குறிப்பிட்டேன். இன்ன செய்ய வேண்டுமென்று நீங்களொவ்வொருவரு மறிவீர்கள் வேதநெறி தழைத்தோங்கவேண்டும், மிகுசைவத்துறை (சிவாகமத்துறை) வளரவேண்டும். இரு கண்களாகிய வடமொழியுந் தென்தமிழும் மறுபடியும் ஓங்கச் செய்யவேண்டும். இவைகளைப் பரிபாலிக்கும் குருவகுப்பினரை ஓங்கச் செய்ய வேண்டுமென்றவென் வேண்டுகோளைச் சமர்ப்பித்து உங்களை வணக்கத்துடன் வரவேற்கிறேன்.

இம்முறை நாங்கள் வரவேற்பவர்களிற் சிறந்து விளங்குபவர்கள் இருவர். ஒருவர் தாய்நாட்டிலிருந்து வந்த தாயாரவர்கள், சைவப்பிரசங்க இன்னிசைச் செம்மனச் செல்வியார் அம்மையாரவர்களாகும். முன்னர் பல முறைகளிலும் பல வரண்டு விளாக்களிலும் பலவாடவர் இங்குவந்து நல்லறிவு புகட்டித் தாய்நாட்டின்தொடர்பை வலிகொடுத்துச் சென்றுர்கள். சேய்நாடாகிய எங்கள் நாட்டிலுமிருந்து பல பெரியோர் ஆங்குச் சென்று எங்கள் பெருமை விளங்கச் செய்தனர். ஆனற் பெண்கள் ஒக்கலியாத உறவு வயிரமற்றது; தொடர்பும் மரியாதையானதுமல்ல. எங்கள் வீட்டிற்பெண் அவள்வீட்டுக்குப் போகமாட்டாள். அங்கு தண்ணீரதானும் குடித்ததில்லை என்று மற்றவர்களை எளனஞ்செய்வர். அந்த வடுவில்லாமல் சிங்களராதிக்கம் தலைகாட்டத் தொடங்கும்பொழுது எங்கள் பிள்ளையை நாம் பாராமுகமாயிருத்தல்கூடாதென்று சொல்லுபவர் போல அம்மையே நீங்கள் வந்தது இருக்கிறது. இங்குள்ள எங்கள் சகோதரிகள்தான் உங்களை வரவேற்கவேண்டியவர்கள், முகமலர்ந்து விருந்தோம்பும் வள்ளிச்செல்விகள். ஆனல் உங்கள் மக்கள் அல்லது மருமக்கள் என்ற உபசாரத்தினுல் போலும் கொஞ்சம் மௌனமாய் நாணமுற் றிருக்கின்றனர். ஆகையாற்றான் நானுமுங்களை அவர்கள் சார்பாய் வந்தனவாசிகூறி வரவேற்கிறேன். மற்றவரென்றுற் பெரியார் திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசாமி Chief Justice Travancore. மற்றது எங்கள் தலைவர் ஸ்ரீமத் சிவபாதசுந்தரம்பிள்ளை. எங்கள் நாடுஞ் சமயமுஞ் செய்த பெருந் தவத்தினுல் அவதரித்த பெருமானுரவர்களே! அறிவு ஆற்றல்களிற் சிறந்து விளங்கும் அப்பரே! ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின்பின் எங்கள் சமயத்துக்குக் கிடைத்த அருந்தவமணியே! நீங்கள் செய்த நூல்களாலும் பிரசங்கம் முதலிய சைவத் தொண்டினுலும், நுண்மாண் நுழைபுலனும் கூர்ந்த மதியுமுடையாரென உமக்கே ஒரு சிறப்புப் பெயரை ஆக்கிக்கொண்ட பெருமானவர்களே! அற்றைநாளில் அகத்தியமுனிவருக்குச் செவியறிவுறுத்திய சுப்பிரமணியக் கடவுளை உள்ளும் புறமும் வணங்கும் பெரியாரே; கந்தவமுனியே; எங்களை வழிகாட்ட வந்திருப்பது எங்கள் பெரும்பாக்கியம். எங்களை வழிநடத்தும்படி வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன். தலைவராயிருந்து மகாநாட்டை நடத்துமாறு தங்களை வேண்டிக்கொள்கிறேன்.

## யாழ்ப்பாணம் பெரியகடைத் தெருவிற் பிரேதம்

சென்ற 19-ந் தேதி யாழ்ப்பாணம் பெரியகடைத் தெருவில் இனந்தெரியாத யாரோ ஒருவர் இரத்தக் காயங்களுடன் இறந்துகிடந்ததாக நகரில் ஒரு செய்தி பரவி மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணியது பொலிஸார் அவ்விடத்துக்குச் சென்று இறந்துகிடந்தவரைப் புகைப்படம் பிடித்தார்கள். விசாரணைசெய்து இறந்துகிடப்பவரின் பெயர் கந்தையா மாணிக்கமென்று தெரிந்துகொண்டனர். இதற்குள் காலஞ் சென்றவரின் பந்துக்களுக்குச் செய்தி எட்டியது அவர்கள், பொலிஸ் ஸ்தானத்துக்கு வந்துசேர்ந்தார்கள்.

காலஞ் சென்றவரின் மனைவி தெரிவித்த விபரம் வருமாறு:—

'காலஞ் சென்றவர் வயிற்று நோயினுற் கஷ்டப்பட்டுக்கொண் டிருந்தார். அவருக்குப் பல 'டக்டர்' சிகிச்சைசெய்தும் பலனில்லை. அவர் இயற்கையாக இறந்திருக்க வேண்டுமே தவிர, சூது எதுவும் நடந்திருக்குமென்று தோன்றவில்லை'

## வடஇலங்கை ஜவுளி வர்த்தகர் சங்கம்

10-4-46ல் கூடிய வடஇலங்கை ஜவுளி வர்த்தகர் சங்க நிர்வாகசபைக் கூட்டத்தின் தீர்மானப்படி 24-4-46 ம் தேதி மாலை 4மணிக்கு யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் ஜவுளிக் கட்டுப்பாட்டதிகாரி கனம் E ஞெட்றிக்கோ அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும் என்றும், அவ்வமயம் சகல ஜவுளி வர்த்தகர்களும் சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர் என்றும் ஷை சங்கத் தலைவர் தெரிவிக்கின்றுர்.

## நிலாவரையில் இருந்து நீர்ப் பாய்ச்சல்

புத்தூரிலுள்ள நிலாவரையிலிருந்து நீர்ப் பாய்ச்சி கமத்தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று டலவருட காலமாக அரசாங்கத்தாருக்கு வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. நிலாவரை நீரை வெளியேற்றி விவசாயம் செய்வதற்குச் சக்தியுள்ள இயந்திரங்கள் இந்நாட்டில் இல்லாமையினுல் பிறநாட்டில் இருந்து வரவழைக்க வேண்டியதாயிற்று. பலமாத காலமாகப் பிறநாட்டில் இருந்து வருமென்று எதிர் பார்த்த இயந்திரங்கள் சென்றவாரம் கொழும்புக்கு வந்து சேர்ந்து விட்டதாகவும் அடுத்தமாதமளவில் இயந்திரங்கள் நிலாவரைக்கு வந்துவிடுமென்றும் வலிகாமம் கிழக்கு கமத்தொழிற்சங்கக் காரியதரிசி தெரிவிக்கின்றுர்.


## பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
நி 156, செககடித்தெரு கொழும்பு

(Mis.25 23-4 46 to 22-3-47)


# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவவதாரப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் வாய்க் கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன

புல்லிய புரம்பொடித் ததுவுங் காமனை -
யோல்லெண வெரித்தது முனக்குச் சீர்த்தியோ
எல்லையில் விதிமுத லேனைத்து மீண்டுநின்
நல்லரு ளாணையே நடாத்து மேன்கையால்

அளவிறந்த சிருட்டி முதலிய தொழில் எல்லாத் தொழில்களையும் இங்கே தேவரீருடைய நல்ல அருளாகிய ஆஞ்ஞா சக்கரமே நடத்துகின்றதெனச் சொல்லப்படுதலினுல், ஒன்றேடொன்று சேர்ந்துள்ளனவாகிய முப்புரங்களைச் சாம்பராக்கியதும் மன்மதனை விழிஅரவில் எரித்ததும் தேவரீருக்குப் புகழைத் தருவனவல்ல என்பது கருத்து,

ஓ எதிர்மறைப் பொருளில் வந்தது; ஏ பிரிநிலை. பிரமா விஷ்ணு உருத்திரனென்னு மிவர்களை யதிஷ்டித்து நின்று படைத்தல் காத்தல் அழித்தலென்னும் முத்தொழிலையும் இயற்றியருளுந் தேவரீருக்கு முப்புரம் படச் சிரித்ததும் மாரன்பட விழித்ததும் பெருஞ் செயலாகமாட்டா என்றபடி.

"தோற்றுவித் தளித்துப் பின்னுந் துடைத்தருள் தொழில்கண் மூன்றும்
போற்றவே யுடையன் ஈசன் புகுந்தது விசார மென்னிற்
சாற்றிய கதிரோ னிற்கத் தாமரை யலருங் காந்தங்
காற்றிடுங் கனலை நீருங் காந்திடுங் காசினிக்கே"

என வருஞ் சிவஞானசித்தித் திருவிருத்தத்தால் "எல்லையில் விதிமுதலெனைத்து மீண்டுநின், நல்லரு ளாணையே நடாத்து மென்கையால்" என்பது இனிது புலப்படும்,

[புல்லியபுரம்-ஒன்றேடொன்று சேர்ந்த முப்புரம்] (37)

எங்களை முன்னரே யியல்பி னீந்தனை
எங்களை யிவ்வர சியற்று வித்தனை
எங்களோ டொருவனேன் றிருத்தி நின்செயல்
எங்களி னறிவரி தேன்று போற்றினுர்.

ஆதியிலே எங்களை முறையே படைத்தருளினீர், எங்களைக்கொண்டு இந்த அதிகாரத் தொழில்களைப் புரிவித்துள்ளீர்: எங்களுளொருவராகவிருந்து தொழிலாற்றுகின்றீர்; இங்ஙனமாயினும் எங்களால் தேவரீருடைய மகத்துவத்தையறிதல் இயலாதாயிற்று என்று பிரம விஷ்ணு முதலாந் தேவர்கள் துதித்தார்கள் என்பது கருத்து.

எங்களையென்றது பிரமவிஷ்ணு முதலானேரை; இவ்வரசு-படைத்தல் காத்தல் முதலிய அதிகாரத் தொழில்கள்: எங்களொடொருவன் – உருத்திரமூர்த்தி: பிரம விஷ்ணுக்களாகிய நாமிருவேமும், முறையே படைத்தல், காத்தற் றொழில்களைத் தேவரீருடைய திருவருளைக்கொண்டு செய்ய, தேவரீர் சங்காரத் தொழிலை, அதிட்டிப்பா ரெவருமின்றிச் செய்துகொண்டும், தேவரீருடைய திருவருளைக்கொண்டு செய்யும் எங்களிருவருடன் சங்காரத் தொழிலைச் செய்யும் உருத்திரனுகப் பேருக்கிருக்கின்றீரெனினும் தேவரீர்க்குரிய சர்வ வல்லமை முதலாம் இயல்புகள் எங்களிடத்தில்லையென்பதை விதந்து காட்டுதற்கே எங்களொடொருவனு யிருத்தியென்னுது "எங்களொ டொருவனென்றிருத்தி" என்று போற்றினுரென்க.

"நோக்கினு நுழைகிலை..." என்ற திருவிருத்தம் முதலாக இத்திருவிருத்த மீறுகவுள்ள ஏழு திருவிருத்தங்களும் அரிபிரமர் முதலாந் தேவர் கைலாசபதியைத் தோத்திரஞ் செய்தவாறும்; வாயுதேவன் மூலமாகப் பரமேசுவரன் எழுந்தருளியிருக்கும் சமயத்தை யறிந்துகொள்ளலாகுமென்று உபாயஞ்செய்து அவனைக் கைலைக்குச் செலுத்திய அரிபிரமேந்திராதிதேவர்கள், தம் உபாயங் கைகூடாமை கண்டு, கைலாசபதியின் பரத்துவத்தையுள்ளவாறுணர்ந்து அவனன்றி அணுவுமசையாதென்பதையும் எக்கருமமும் இறைவன் திருவருட்பாங்கையொட்டி நடப்பனவேயென்பதையும் உள்ளபடி தத்தம் உள்ளத்திற் கொண்டு பயபக்தியோடு செய்த தோத்திரங்களென்பதை இத் தோத்திரத் திருவிருத்தங்களே நுண்ணறிவுடையார்க்குப் புலப்படுத்தல் காணக்கிடக்கின்றது. தேவர்கள் அந்த நேரத்தில் நின்ற நிலை "என்செயலாவது யாதொன்றுமில்லை இனித் தெய்வமே உன்செயலேயென் றுணரப்பெற்றேன்" எனப் பட்டினத்தடிகள் எடுத்துக்காட்டி உலகோர்க்குத் தெருட்டிய நிலையாகும்,

[முன்னரே பிரம விஷ்ணுக்கள் அரந்தேசுவாருடைய வலப்புயத்தும் இடப்புயத்தும் போன்றினரென்றிருப்ப, ஸ்ரீகண்ட பரமேசுவரனை நோக்கி "எங்களை முன்னரே யியல்பினீந்தனை" என்றது உபசாரமென்க.] (38)

## புலோலித் தமிழ் இளைஞர் கழக இரண்டாவது ஆண்டு நிறைவு விழா

நாளது சித்திரைத் திங்கள் சித்திரா பூரணையன்று (16-4-46) செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி தொடக்கம் ஷை கழக நிறைவு விழா புற்றளைச் சைவப் பாடசாலையில் டாக்டர் கு. சிவப்பிரகாசம் எம். எஸ். சி, பி. எச். டி. அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அத்தருணம் வித்துவான் பொ. சிவப்பிரகாசம் அவர்கள் 'இக்காலக் கல்வியுலகம்' என்னும் விஷயம்பற்றியும், பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள் 'தொண்டர்பெருமை' என்னும் விஷயம் பற்றியும், பண்டிதர் நாக. மைவண்ணன் அவர்கள் 'கிராமச் சீரமைப்பு' என்னும் விஷயம்பற்றியும் சொற்பொழிவாற்றினுர்கள். இடையிடையே இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றது. க. க. முருகேசபிள்ளை ஆசிரியரும், க. தம்பையா ஆசிரியரும், பொன். சின்னத்துரை ஆசிரியரும குறிப்புரை கூறினுர்கள். முடிவில் சமுகம் அளித்தோர் யாபேர்க்கும் வீர. கணபதிப்பிள்ளை (செயலாளர்) நன்றியுரை கூறினர். அதன்பின் சபையோர்க்குச் சிற்றுண்டி வழங்கியதும் கூட்டம் இனிது நிறைவேறியது.

## அறிவித்தல்

திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையில் 28-6-45ல் நடந்த நேர்முகப் பரீட்சையில் எனது தமிழ் S. S, C. தராதரப் பத்திரத்தைத் தவற விட்டுவிட்டேன். எடுத்தவர்கள் எமக்கு அனுப்புமாறு வேண்டுகிறேன். சுட்டு இலக்கம் K. W. 45 துரையப்பா சுப்பிரமணியம் C/o S, P. சர்மா, கோப்பாய்.

(Mis 23 22-4 46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகப் பிரசித்திபெற்ற

# கமலா சர்க்கஸ்

திறமை வாய்ந்த நிபுணர்களாகிய
ஆண்களும் பெண்களும்

**3 பயங்கரமான சிங்கங்கள் 16 குதிரைகள்**

இன்னும் பல்வேறு திறமைவாய்ந்த மிருகங்கள்

**இன்று 12-4-46 வெள்ளிக்கிழமை தொடக்கம்**

## யாழ்ப்பாணம் முற்றவெளியில்

தினந்தோறும் மாலை 6 மணிக்கும், இரவு 9½ மணிக்கும் இரு காட்சிகள்
சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 3 மணிக்கு விசேஷகாட்சி

'ரப்பேஸிய' (Trapezium) விளையாட்டுப் பரமானந்தம்

**பிரவேசச் சீட்டு விபரம்**

நால்வர் இருக்ககூடிய பிரத்தியேக ஆசனம் ரூபா 25
ஒருவர் ,, ,, ,, ரூபா 7
'றிசேவ்ட்' ரூ 5. முதல் வகுப்பு ரூ 3. இரண்டாம்வகுப்பு ரூ 2
கலரி ரூ 1.

Mis 10 9-4—30-4

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)

## அரசினர் விளம்பரம்

சுதேச வைத்திய கலாசாலை
கோட்டாறோட்டு, கொழும்பு

சுதேச வைத்திய கலாசாலையிற் சேர விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை ஷை கலாசாலை அதிபருக்கு 1946ம் ஆண்டு சித்திரை மாசம் 30ந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஷை கலாசாலையிற் சேர விரும்புவோர் கீழ்வரும் பரீக்ஷைகள் ஏதாவதொன்றில் சித்தி யடைந்தவராயிருத்தல் வேண்டும்:

(1) ஆயுள்வேத வகுப்பு
- a. எஸ். எஸ். சி. (சிங்களம்)
- b. எஸ். எஸ். சி. (ஆங்கிலம் சிங்களத்துடன்)
- c. லண்டன் மற்றிக் சிங்களத்துடன்
- d. வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவேனுவிலினால் நடத்தப்படும், மத்திய அல்லது மேல்தர பரீட்சைகள்

(2) சித்த வைத்திய வகுப்பு
- a. எஸ். எஸ். சி. (தமிழ்)
- b. எஸ். எஸ் சி (ஆங்கிலம் தமிழுடன்)
- c. லண்டன் மற்றிக் (தமிழுடன்)
- d ஆரிய திராவிட வித்தியா விருத்திச் சங்கத்தினால் (Oriental Studies Society) நடத்தப்படும், பிரவேச பண்டிதர் அல்லது பண்டிதர் பரீக்ஷைகள்

(3) யூனானி வைத்திய வகுப்பு
- a. ஜே. எஸ். சி ஆங்கிலம் (மகமதியர்களுக்கு மாத்திரம்)
- b. எஸ். எஸ். சி. (ஆங்கிலம்)
- c. லண்டன் மற்றிக் அல்லது அதற்கு மேற்பட்ட பரீக்ஷைகள்

ஏ. என். என். பணிக்கர்,
அதிபர், சுதேச வைத்திய கலாசாலை
கொட்டா றோட்டு,
கொழும்பு, 2 4-46

(G 10 23, 26-4-46)



REGD

## கிறைப் - விற் - டி

(GRIPE—VIT—D)

குழந்தைகளுக்கு
ஆரோக்கியத்தைத் தரும்

வயிற்றுவலி, புளிப்புத்தன்மை, உவாந்தி, வாய்வுத்தன்மை, வலி, பல்லரும்பும்போதுள்ள வருத்தம், வயிற்றோட்டம், விக்கல் முதலிய

குழந்தைகளின் சகலரோகங்களுக்கும்
நிச்சய நிவாரணம்

**கிடைக்கும் இடங்கள்:**

கொம்மேஷல் பிறெஸ்
டயறம்ஸ்
சிற்றி டிஸ்பென்ஸரி
நியூற்றன்ஸ் } பெரியதெரு, யாழ்ப்பாணம்.

றோயல் பாமேசி
றோயல் டிஸ்பெஸ்ஸரி
மெடிக்கல் ஹோல்
யாழ்ப்பாண ஐக்கியசங்கக் கடை } ஆஸ்பத்திரிவிதி, யாழ்ப்பாணம்.

K. C. தெட்சணாமூர்த்தி, காங்கேசன் துறைறோட், பெரியகடை, யாழ்ப்பாணம்

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:

**மொடேண் ஏஜென்சீஸ்,**
சிலாபம், (இலங்கை)

(Mis 185. 31—31-12-46)

## வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

## அஜ்மீர் ஜெனரல் அஷூரன்ஸ்

**வீமாக்கொம்பனி லிமிற்றெட்**

ஸ்தாபிதம் 1907

எமது அதிசய சேவையின் அற்புத வெற்றி

| | | |
|---|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 | மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ | 113,00,000—00 | ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 | ,, |
| 1944ம் ஆண்டு வருஷாந்த வருமானம் | 39,45,103—00 | ,, |

ஆயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஈடு, விபத்து
முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது
இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை
நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கொடுக்கப்படும்
விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, **டொன் கரலிஸ் கட்டிடம்,**
91, முதலாம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

Mis 154 29-11-45—30-11(தி)

## புகையிலை தேவை

●

பெருந்தொகையில் யாழ்ப்பாணப் புகையிலை தரக்கூடியவர்கள், என்ன விலைக்கு, மாதம் எவ்வளவு, தரமுடியும் என்பதைப் பின்வரும் விலாசதாருக்கு எழுதுக: வங்கி மூலமாக உரக்கம் கொடுக்கப்படும்.

●

**T. N. ரத்தினம்,**
82, அம்பாங்தெரு,
கோலாலம்பூர், மலேயா.

Mis 9 9-4—13-5

## தீவுப்பகுதித் தேர்தல்

●

புதிய அரசியலில் அமைக்கப்படும் அரசாங்கசபையில், தீவுப்பகுதிப் பிரதிநிதியாய் வர நான் முற்பட்டிருக்கிறேன்.

ஆங்கில இந்துசாதன ஆசிரியராக எந்தக் கொள்கையை அநுசரித்தேனோ, அதுவே இனியும் எனது அரசியற்கொள்கையாகும்.

**A. V. குலசிங்கம்**

Mis 11 9—30-4

## பேர்பெற்ற பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகள்

உலகப் பிரசித்திபெற்ற, திறமானவையும், நன்மதிப்பு உள்ளவையும், பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகளே. மிகக் குறைந்த தண்ணீரை உறுஞ்சுவன. கடைகளில் விலைப்படும் பலதினிசு ஓடுகளையும் நிறுத்துப்பார்த்துத் தண்ணீருள் நனையவிட்டுபபின்னும் நிறுத்து எது கூடிய தண்ணீரை இழுக்குமெனப் பரிசோதித்துப் பாருங்கள். தற்கால நிலைமைக்கும், தேவைகளுக்கும் ஏற்ற ஒரு புதுமாதிரி இவ்வோடுகள் செருகு விழிம்பும், இரட்டைப் பீலியும் உள்ளனவாய்ச செய்யப்பட்டு இக்காலத்தில் அதிசமாய் உபயோகிக்கப் படுகின்றன. கீழைத் தேசத்தில் விலைப்படும் ஓடுகளுள் இவைகளே முதன்மை பெற்றன. வாங்கத் தீர்மானிக்குமுன் இவ்வோடுகளை ஒருதரம் பாருங்கள், கவனியுங்கள். மற்றைய ஓடுகளில ஏமாந்து நட்டப்படாதீர்கள்.

வேறு சாதி ஓடுகளைப்போல வழக்கமான தனிப் பீலி ஓடும்
இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

**வில்லியம் மேதர் அன்சன்ஸ், தனி ஏசன்ட்**
1888-ம் ஆண்டுமுதல்.

Misc 250—19-3-46—19-9-46) (செ)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

## வியாபாரத்திற்கழகு விளம்பரஞ் செய்தல்

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday April. 23, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org